**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**அசல் வழக்கு எண்.1130/2024** **நாள்- 23.01.2026**

**<u>பி.வா.சா.1. மதியழகன்</u>**

**<u>குறுக்கு விசாரணை வாதி தரப்பில்</u>**

என் தகப்பனார் பெயர் பொன்னையா என்ற பொன்னுத்தேவர் தாயார் பெயர் சரஸ்வதி.எனக்கு புஷ்பம் என்ற சகோதரி உண்டு. என் தாத்தா பெயர் பெரிய கருப்புத் தேவர் என் தாத்தாவிற்கு 2 மக்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் மற்றும் ராசுத்தேவர் ஆகியோர்கள் ஆவார்கள். ராசுத்தேவருக்கு மாரியம்மாள், முனியம்மாள் என்ற 2 பெண்மக்கள். தாவா சொத்தின் சர்வே எண்.1009/2. அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 30 செண்ட் என்றால் சரிதான். என் தாத்தா தாவா சொத்தை வா.சா.ஆ.1 மூலம் கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல பூர்வீகச் சொத்தாகும். பெரியகருப்பத்தேவர் அப்பா பெயர் ஆண்டிக் கருப்பத் தேவர். ஆண்டிக் கருப்பத்தேவர் பெயரில் தான் தாவா சொத்திற்கு பட்டா உள்ளது என்றால் சரிதான். ஆண்டிக் கருப்பத்தேவருக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது. எனது தாத்தா 1972 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா இறந்த பிறகு தாவா சொத்துக்களை என் அப்பாவும், சித்தப்பாவும் பொதுவாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். என் அப்பாவும், சித்தப்பாவும் சேர்ந்து 1992 ம் ஆண்டு வா.சா.ஆ.2-ன் படி ராஜேந்திரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ராஜேந்திரன் தாவா சொத்தை பெருமாயி என்பவருக்கு தானமாக எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். பெருமாயிடமிருந்து தான் வாதிகள் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். ஆனால் கிரைய வாங்கி சொத்துக்கள் வந்த பிறகு தான் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். 2012 ம் ஆண்டு தான் வாதிகள் தாவா சொத்திற்குள் வந்தார்கள். 2012 ல் வாதிகள் தாவா சொத்திற்குள் வந்த போது மேற்கண்ட கிரையங்கள் எங்களுக்கு தெரிய வந்தது. வாதிகள் வாங்கிய கிரையங்கள், முந்தைய கிரையங்கள் செல்லாது என்று சட்டநடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்வதை இடையூறு செய்ததால் வாதிகள் முதலில் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்று கேட்டால் அதற்கு முன்பாக நாங்கள் விருதுநகர் நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தோம். வாதிகள் வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் அ.வ.எண்.1129/2024 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். என் தகப்பனார் 2002 ம் ஆண்டு இறந்துவிட்டார். 1992 லிருந்து 2012 வரை தாவா சொத்தை நானும் என் தகப்பனாரும் அனுபவம் செய்து வந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் எங்கள் பெயரில் தான் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். 1992 லிருந்து 2012 வரை தாவா சொத்திற்கு என் அப்பா பெயரில் தான்

பட்டா, தீர்வை ரசீதுகள் என் கைவசம் தான் உள்ளது என்று கேட்டால் இல்லை. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு கடைசியாக எப்போது வரி செலுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ராசுத்தேவர் பெண்மக்கள் மாரியம்மாள், முனியம்மாள் எங்கள் ஊரில் இருக்கிறார்கள் அவர்களுக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் தெரியும். ராசுத்தேவர் பெண்மக்கள் மாரியம்மாளும், முனியம்மாளும் கிரைய ஆவணங்கள் பற்றி ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்று கேட்டால் தெரிவிக்கவில்லை. உண்மையிலேயே தாவா சொத்து என் தாத்தா பெரியகருப்புத் தேவருக்கு வா.சா.ஆ.1ன் படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து வா.சா.ஆ.2 கிரையம் கொடுத்த பிறகு நாளது தேதி வரை நாங்கள் அனுபவம் செய்து வந்தது இல்லை என்றும் வாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து நாங்கள் கேட்கும் பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும் அ.வ.எண்.1130/2024 வழக்கில் வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.